# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.36 (L.W.60)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr. Mohamed Shameer | Caste | : Muslim- Labbai |
| Father's Name | : A.Mohamed Ismoil | Calling | : - |
| Village | : Ashok Nagar | Religion | : Muslim |
| Taluk | : Chennai | Age | : 43/M |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.02.2025.

(A1 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A2 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.13 P.M.**

நான் தற்போது போரூர் ராமசந்திரா முடநீக்கியல் துறையில் கூடுதல் மருத்துவ பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 25.06.2015 அன்று சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவனையில் முடநீக்கியல் துறையில் உதவி பேராசிரியராக முறை பணியில் இருந்தேன். கடந்த 26.06.2015 அன்று அதிகாலை 201 அவசர சிகிச்சை வார்டில் ஷமீல்பாஷா என்கின்ற 28 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் அவருக்கு மருத்துவ பரிசோதனைக்காக அழைக்கப்பட்டேன்.

மேற்கண்ட நபர் வேலூர் மருத்துவமனை மருத்துவ கல்லூரியிலிருந்து மேல்சிகிச்சைக்காக 201 வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு வலது கை செயல் திறனற்றிருந்தது.

அவருக்கு மருத்துவ பரிசோதனையும் நுண்கதிர் பரிசோதனையும் மேற்கொண்டேன. பரிசோதனையின் முடிவில் எலும்பு முறிவுகள் இல்லை என்று சான்றிளித்தேன். மேலும் வலது கை செயல் திறன் பற்றி சிகிச்சகைக்காக ஒட்டுறுப்பு துறையை அணுகுமாறு கருத்து அளித்தேன். இந்த விவரங்களை நோயாளியின் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்தேன்.

அந்த Case sheet ல் என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுதினார்கள். நான் அதை சரிபார்த்து அதில் சுருக்கொப்பம் செய்துள்ளேன். நான் வழங்கிய Case sheet ஏற்கனவே அ.த.சா.ஆ.54 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு தாளின் பின்பக்கமும் அடங்கியுள்ளது. என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்தார்கள்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக நோயாளியின் முந்தைய Case sheet–ல் கண்ட விவரங்களை பார்த்துவிட்டுதான் அவருக்கு சிகிச்சை அளிப்பது மற்றும் மாத்திரை மருந்துகளை எழுதுவோம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.54 மற்றும் 55 ல் நோயாளியின் பெயரை நான் தனியாக குறிப்பிடவில்லை.

நோயாளியின் பெயரை கேட்டு அது Case sheet–ல் உள்ளதை உறுதிப்படுத்திதான் நோயாளிக்கு நான் சிகிச்சை அளித்தேன். நான் கையொப்பம் இடும்போது என்னுடைய பெயரை பெரிய எழுத்துக்களில் எழுதி நேரம் மற்றும் தேதியை குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான்.

அரசாங்க மருத்துவனையில் அதிக நோயாளிகளை பார்ப்பதால் சுருக்கொப்பம் மட்டும் போடுவது நடைமுறையில் இருந்தது. அது தவறுதான். என்னுடை மருத்துவ மாணவர்கள் எழுதியதாக நான் கூறியது பொய் என்றும், நேரம் இருந்தும் அதை நான் எழுதாமல் மருத்துவ மாணவர்கள் எழுதியதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Case sheet ல் எத்தனையாவது பக்கம் நான் எழுதினேன் என்றால் தொடர்ச்சியான தாள்களில்நோயாளியின் நோய் விவரங்களை பணி மருத்துவர்கள் எழுதுவார்கள் அதன்படி நான் எழுதினேன். அதன் பக்க எண் அதன் பிறகுதான் எழுதுவார்கள். எனக்கு முன் நோயாளியை அவரச மருத்துவ சிகிச்சை பிரிவின் மருத்துவர் நோயாளியை பார்த்தார். அதன் பின்னிட்டு அவர் என்னை அழைக்க நான் நோயாயிளை பார்த்து அதற்குண்டான சிகிச்சையை பற்றி நான் Case sheet ல் எழுதினேன்.

சிபிசிஐடி போலீசாரிடம் நான் வாக்குமூலம் கொடுக்கும்போது Case sheet ஐ பார்த்துதான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் Case sheet ல் குறிப்பிட்டுள்ளதை தவிற நோயாளிக்கு வேறு காயங்கள் இல்லை என்றால் சரிதான். அந்த காயம் வலது முழுகை செயல் திறனற்றிருந்தது.

நான் எடுத்த எக்ஸ்ரேவை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் பொதுவாக மருத்துவமனயைில் ஆவணகாப்பகத்தில் பாதுகாப்பார்கள். நான் கூறிய தேதியில் நான் அந்த நோயாளிக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்காக வெற்றுதாளில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. அ.த.சா.ஆ.54 ஒளிநகல் ஆவணம் என்றால் சரிதான்.

அதன் அசல் ஆவணங்களை பார்த்தால்தான் அ.த.சா.ஆ.54 மற்றும் 55–ல் என்னால் எழுதப்பட்ட வாசகங்கள் சரியானது என்று தெரியும் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.54 மற்றம் 55 என்னால் எழுதப்பட்டது. இருந்தாலும் அ.த.சா.ஆ.54 மற்றம் 55 ஒளிநகல் ஆவணம்தான் என்றாலும் அதில் Attest செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.55 ல் என்னால் எழுதப்பட்டவை ஒரு ஒரு வார்த்தையாக எழுதி incomplete ஆக உள்ளது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் நோயாளியை பரிசோதித்தபோது அந்த சமயத்தில் General surgeon யார் என்றால் 201 வார்டின் மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அவசர சிகிச்சை பிரிவில் அன்றைய தேதியல் பொறுப்பு மருத்துவராக இருந்தார். நான் நோயாளியை பார்த்தபோது என்னுடன் இருந்த மற்ற மருத்துவர்கள் யார் என்றால் தற்போது நினைவில்லை.

நான் நோயாளியை பரிசோதித்த அன்று மற்ற துறைகளில் மருத்துவர்கள் இருந்தார்களா என்றால் 26 துறையை சேர்ந்த மருத்துவர்கள் பணியில் இருந்தார்கள்.

நான் Opinion–காக அழைக்கப்பட்டேன். Referral என்றால் ஒரு நோயாளியை ஒரு வார்டில் இருந்து மற்றொரு வார்டில் உள்ள மருத்துவரின் நேரடி பார்வையில் மருத்துவம் பாரக்க அழைப்பதாகும். இந்த வழக்கின் நோயாளியை என்னை Opinion காக அழைத்தார்கள். என்னை Refer செய்யவில்லை. Opinion உடனடியாக ஒரு மணி நேரத்திற்குள்ளாக தரவேண்டும் எனபதால் அதற்கு எந்தவித எழுத்துமுற உத்தரவும் கிடையாது. உடனடியாக சென்று நோயளியை பார்க்க வேண்டும். பார்த்த விஷயத்தை Case sheet ல் குறிப்போம். referral என்பது 24 மணி நேரத்திற்குள்ளாக நோயாளியை பார்கக் வேண்டும். அதற்கு பதிவேட்டில் குறித்து எந்த வார்டில் இருந்து எந்த வார்டுக்கு அனுப்புவோம் என்று எழுதுவார்கள்.

என்னை opinion கொடுக்க யார் அழைத்தார்கள் என்றால் மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அழைத்தார். அந்த விவரம் அ.த.சா.ஆ.54 மற்றும் 55–ல் உள்ளதா என்றால் இல்லை. நான் நோயாளியின் எக்ஸ்ரேவை மட்டும்தான் பார்த்தேன். எலும்பு முறிவோ அல்லது நரம்பு தொடர்பாக பாதிப்புகளை சிடிஸ்கேன் எடுத்து பார்த்தால்தான் தெளிவாக தெரியும் என்றால் சரிதான். நான் opinion தரும்போது clinical diagnosis தான் செய்தேன். By way of sign and symptoms I have seen the patient and given the opinion.

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது நீதிமன்றத்தில் கூறிய clinical diagnosis செய்த விவரங்களை சொன்னேனா என்றால் நோயாளியை பரிசோதித்த பின்னர் பெரிய அளவில் எலும்பு முறிவு அவருக்கு இல்லை என்று கூறினேன். clinical diagnosis செய்ததாக குறிப்பிட்டு போலீசாரிடம் கூறினேனா என்றால் சொல்லவில்லை.

என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்த தேதி சரியாக நினைவில்லை. நோயாளியை நான் பரிசோதனை செய்த 6 மாதங்கள் கழித்து விசாரித்தார்கள். நான் Case sheet ல்சுருக்கொப்பமிட்டேன். நான் எக்ஸ்ரே அறிக்கைளையும் அதனுடைய படத்தையோ போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.05 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.12 18:11:46 +0530